www.Padasalai.Net www.CBSEtips.in

# 7 - ஆம் வகுப்பு முதல் பருவ தொகுத்தறித் தேர்வு – 2022

காலம் : 2.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 60

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5 X 2 = 10

**அ) பொருள் கூறுக.**

1. முகில்
2. பரி

**ஆ) சேர்த்து எழுதுக.**

3. தன் + நெஞ்சு
4. கல் + அளை

**இ) பிரித்து எழுதுக.**

5. காடெல்லாம்
6. குரலாகும்

**ஈ) பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 7. | பொக்கிஷம் | - | முற்றுப் போலி |
| 8. | சிங்காரம் | - | செல்வம் |
| 9. | பந்தர் | - | அழகு |
| 10. | அஞ்சு | - | கடைப்போலி |

**உ) நிரப்புக.**

11. 'காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு' என்று அழைக்கப்படும் விலங்கு .................. .
12. கரடிகளைத் தேனீக்களிடமிருந்து காப்பது அதன் ......................... .

**II சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4 X 1 = 4

13. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் .................. .
அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி
14. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ............... .
அ) பச்சை இலை ஆ) கோலிக்குண்டு இ) பச்சைக்காய் ஈ) செங்காய்
15. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் ........... .
அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை இ) முண்டந்துறை ஈ) கூந்தன் குளம்
16. முத்துராமலிங்கத் தேவர் நடத்திய இதழின் பெயர் ............. .
அ) இராஜாஜி ஆ) நேதாஜி இ) காந்திஜி ஈ) நேருஜி

**III கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு மூன்று வரிகளில் விடையளி.** 5 X 2 = 10

17. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.
18. மொழியின் இரு வடிவங்கள் யாவை?



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593 CamScanner

19. நாவல் மரம் எத்தனை தலைமுறைகளாக அங்கு நின்றிருந்தது?
20. வாழும் நெறி யாது?
21. தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார்?
22. முத்துராமலிங்கத்தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.
23. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.

**IV அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

24. "அருள்நெறி" எனத் தொடங்கி 'அன்பறமே" என்று முடியும் வரை உள்ள "எங்கள் தமிழ்" பாடலை எழுதுக.
25. "வாய்மை" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**V கீழ்க்காணும் வினாக்களுள் இரண்டனுக்கு விடை எழுதுக.** 2 X 2 = 4

26. குற்றியலிகரம் என்றால் என்ன?
27. ஔகாரம் எப்பொழுது முழுமையாக ஒலிக்கும்?
28. தகுதி வழக்கின் வகைகள் யாவை?

**VI கீழ்க்காணும் வினாக்களுக்குப் பத்து வரிகள் மிகாது விடை எழுதுக.** 2 X 5 = 10

29. பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக. ***(அல்லது)***
'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.
30. பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் பற்றி எழுதுக. ***(அல்லது)***
தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?

**VII கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை எழுதுக.** 2 X 5 = 10

31. ஜாதவ் பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்? ***(அல்லது)***
வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.
32. "தாய்மொழிப் பற்று" என்பது பற்றி கட்டுரை எழுதுக. ***(அல்லது)***
நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

**VIII கீழ்க்காணும் மொழிப் பயிற்சி வினாக்களுக்கு விடையளி.** 3 X 2 = 6

33. தொகைச் சொற்களை விரித்து எழுதுக.
அ) முக்கனி ஆ) ஐவகை நிலம்

34. ***பிழையைத் திருத்தி சரியாக எழுதுக.***
அ) பசு கன்றை ஈன்றன.
ஆ) குழலி நடனம் ஆடியது.

35. ***கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக.***
அ) திருக்குறளில் ............. அதிகாரங்கள் உள்ளன.
ஆ) இந்தியா ................ ஆம் ஆண்டு விடுதலை பெற்றது.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593
CamScanner